# கம்பீரம், கனிவான குரல் கொண்ட சுதா ரகுநாதன்

இசை விழாவின் ஒரு பகுதியாக நுங்கம்பாக்கம் கல்சுரல் அகடமியின் ஆதரவில் நடைபெற்றது சுதா ரகுநாதனின் கர்நாடக இசை கானம் கமாஸ் ராக வர்ணத்துடன் தொடங்கியது.

அடாணா ராகத்தில் கஜானனயுதம் சுலோகம் சொல்லி ஸ்ரீ மகா கணபதி என்ற தீட்சிதரின் கீர்த்தனையும் பாடினார். அடாணாவில் ஆரம்பித்த கம்பீரமும், கனிவான குரலும் 'குறை ஒன்றும் இல்லை' வரை சிறிதும் குறையில்லாமல் பாடுவது சுதாவுக்கே உரித்தான கச்சேரி பாணி. அவர் பாடும்போது எம்.எஸ்.வி.,வின் நினைவு ரசிகர்களுக்கு வராமல் இருக்காது.

ராகம், நிரவல், ஸ்வரம் என்று எந்த ராகமாக இருந்தாலும் அந்த ராகத்தின் ராக சாயல், விசேஷ, அரிதான அழகான சஞ்சாரங்களை கலந்து கொடுப்பது என்பது ஒரு சிலருக்கே கை கூடி வரும். அதில் அவருக்கு நிகர் அவர் தான்.

பேச்சு வழக்கில் 'வார்த்தைகளில் தேன் தடவி' என்று சொல்வர். ஆனால், சுதா தன் தொண்டையில் தேன் என்னும் வற்றாத அட்சய பாத்திரத்தை வரமாக வாங்கி வந்துள்ளார். 'அந்தரிகி வந்தனமு' என்ற தியாகய்யரின் பஞ்சரத்ன கீர்த்தனையை பாடி கச்சேரியை களை கட்ட வைத்தார்; அரங்கம் நிரம்பி வழிந்தது.

'பரமபுருஷ' என்ற லலித பஞ்சமம்



ராக அரிதான கீர்த்தனையை தீட்சிதருடையது. பிறகு மோகன ராகத்தில் பாபநாசம் சிவனின் 'மயில் வாகனா' மனதை கொள்ளை கொண்டது. பைரவியில் 'யாரோ இவர் யாரோ' பிரதான ராகமாக ஹேமவதி, தீட்சிதரின் ஸ்ரீகாந்திமதீம், ஹேமவதி ராக ஆலாபனை சந்தனமாக அரைத்து, அழகு குங்குமமாக ரசிகர்களின் நெற்றியில் தங்கத் திலகமாக வைத்து விட்டார்.

அவ்வளவு அருமையான ஆலாபனை, நிரவல், ஸ்வரம் எல்லாமே ஒன்றுக்கொன்று போட்டி போட்டன. சுதாவுக்கு தாரஸ்தாயி சஞ்சாரங்கள் ஒரு இசை விளையாட்டுப் போல அருவி போல வந்து கொட்டுகிறது. அதை அள்ளி அள்ளி கேட்க ரசிர்கள் என்ன தவம் செய்தனை என்ற இந்துஸ்தானி காபி சிவனின் கீர்த்தனை.

'பாலூட்டி சீராட்டி தாலாட்ட' என்ற வரிகளை சுதா இரவு 9.25 மணிக்கு பாடினால் யாருக்குத் தான் தூக்கம் வராது. இது போதாது என்று நிறைவாக 'குறை ஒன்றும் இல்லை' என்று தன் நிகழ்ச்சியை கேட்க வந்த ரசிகர்களுக்கு என்றும் ஒரு குறைவும் வைக்க மாட்டான் கோவிந்தன் என்று பாடிய விதம் வெகு நேர்த்தி.

பக்க வாத்தியம் படு அனுசரணையாக இருந்தது. வயலினில் மிக அனுசரணையாக, நேர்த்தியாக ராகவேந்திர ராவ் வாசித்தார். மிருதங்கத்தில் - ஸ்கந்த சுப்ரமணியன் பக்க பலமாக வாசித்தார். முகர்சிங் - ராமனும் நிறைவாக கை கோர்த்தார்.

கச்சேரியை கேட்டு வெளியே வந்தவர்களுக்கு இன்ப அதிர்ச்சியாக நல்ல கொட்டும் மழை. வருண பகவான், சுதாவின் ஹேமவதியை மறந்து போய் அம்ருத வர்ஷிணி என்று எண்ணி ஆனந்த கூத்தாடி தன் ஆசீர்வாதத்தை கொடுத்து விட்டார் போலும்.

**- ரசிகப்ரியா.**